# <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| O.S. No. 277/2014 | Date : 24.07.2023 | PW1 |
|---|---|---|
| Name: மதியழகன் | த/பெ.அபிமன்னன் | |
| Evidence Recorded Time: 11.11 P.M. to 11.20 P.M | | |

**9, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

9, 10 பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் கிரைய ஒப்பந்தத்தின் படி கிரையம் எழுதிதரக்கேட்டுள்ளேன். கிரைய ஒப்பந்த பத்திரத்தை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேனா என்றால் பதிவு செய்துள்ளேன். சேட்டு என்பவருக்கு பவர் கொடுத்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பவர் பத்திரத்தை ரத்து செய்ததும் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலமாக தான் என்றால் சரிதான். 9, 10 பிரதிவாதிகள் பொறுத்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்படும் போது இருதரப்பு சம்மதங்களின் பேரில் பதிவு செய்வதும், ரத்து செய்வதும் செய்யப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பவர் பத்திரத்தை ரத்து செய்தது எனக்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எந்த ஒரு தவறான ஆவணத்தையும் 9, 10 பிரதிவாதிகள் பதிவு செய்யமாட்டார்கள் என்றால் சரியல்ல. பவர் பத்திரம், கிரைய பத்திரம், ரத்து பத்திரம் ஆகிய அனைத்தும் இருதரப்பு சம்மதத்துடன் தான் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்றாலும், அதில் தவறு எதுவும் இல்லை என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. 9, 10 பிரதிவாதிகளை வழக்கில் சேர்க்க எந்த ஒரு முகாந்திரமும் இல்லை என்றாலும், அவசியமற்ற தரப்பினர்கள் என்றாலும் சரியல்ல. பத்திர அலுவலகத்தில் சரியான ஆவணங்களை தாக்கல் செய்யும் போது வில்லங்க விவகாரங்களை பத்திர அலுவகத்தில் சரிபார்த்துதான் பதிவு செய்வார்கள் என்றால் சரியல்ல. 9, 10 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு அதிக பட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/-PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.